செ.வெ.எண்: 47 நாள்: 29.06.2021

பெரம்பலூர் மாவட்டம்

**பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலம்பாடி ஊராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.06.2021) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலம்பாடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.19.72 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் ஊராட்சிமன்ற கட்டிட பணிகளையும், ரூ.1.89 இலட்சம் மதிப்பீட்டில் தனிநபர் இடத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆட்டு கொட்டகையினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பயனாளியிடம் ஆட்டுக்கொட்டகை பராமரிப்பு குறித்தும், அரசின் சார்பில் அமைத்து தரப்பட்ட ஆட்டு கொட்டகையினை பராமரிப்பு செய்வதற்கு போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதை குறித்தும் கேட்டறிந்தார்.

ஆலம்பாடி நியாய விலைக் கடைக்கு நேரில் சென்று அத்தியாவசிய பொருட்கள் இருப்பு குறித்தும், அளவீட்டு இயந்திரம் முதலானவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்கள் பொது இடங்களில் குப்பைகளை கொட்டுவதை தவிர்க்கும் வண்ணம் அவர்களின் வீடுகளுக்கே சென்று குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என தரம் பிரித்து, சேகரிக்க ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் தூய்மை பணியாளர்கள், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பொதுமக்கள் தங்களது இருப்பிடம் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரித்து எந்தவித நோய்தொற்றும் ஏற்படாத வண்ணம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து ஆலம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செஞ்சேரி கிராமத்தில் தூய்மை இந்தியா 2019-20 திட்டத்தின்கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று முடிந்த நுண்உயிர் உரம் தயாரிக்கும் மையத்தினை பார்வையிட்டு உரத்தினை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

ஆய்வின்போது, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கே. லோகேஸ்வரி, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) பாரதிதாசன், உதவி பொறியாளர்(ஊரக வளர்ச்சி மற்றும் முகமை) தனபால், இளநிலை பொறியாளர் ராஜன்பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில், மோகன், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**